# "கவிஞர் யுகபாரதியின் மனப்பத்தாயம் கவிதைத் தொகுப்பில் சமுதாய சிந்தனைகள்"

## Unveiling the Soul's Harvest: Social Reflections in Yugabharathi's "Manappathayam"

**ப. பொற்கொடி[1], முனைவர் க. மோகன்காந்தி [2]**

1.முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்) – 322PHD23P622TAM,

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் – 635 601,

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது, சேர்காடு, வேலூர் – 632 115.

2.நெறியாளர், உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் – 635 601.

**B. Porkodi[1], Dr.G. Mohangandhi[2]**
1.Part Time Research Scholar – 322Phd23p622tam,
Department Of Tamil, Sacred Heart College(Autonomous), Tirupattur – 635601,
Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632115.
Email: gurumoorthiguru10@gmail.com, ORCiD:
2.Research Guide, Assistant Professor, Department Of Tamil, Sacred Heart College (Autonomous),
Tirupattur – 635601,

**Abstract:**
The writings of poet Yuga Bharathi have always been revolutionary in society. His film songs, poems, and articles all have an impact on society. Manapatthayam is the poet's first collection of poems. It serves as a mirror that reflects the best thoughts, social miseries, and the lives of the poor people. Manapatthayam is the rough experience taught by the passing generations on the sad pages of personal life.

**Keywords**: Yugabharathi, Manappathayam, Poem, Literature

**ஆய்வுச் சுருக்கம்:**

கவிஞர் யுகபாரதியின் எழுத்துக்கள் எப்பொழுதும் சமூகத்தில் புரட்சியினை விளைவிக்கும் வகையில் அமையும். அவரின் திரைஇசைப் பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள் என்னும் அனைத்துமே சமூகத்தில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தும். மனப்பத்தாயம் என்பது கவிஞரின் முதல் கவிதைத் தொகுப்பு. சிறந்த சிந்தனைகளையும், சமூக அவலங்களையும், ஏழை மக்களின் வாழ்க்கையை படம்பிடித்துக் காட்டும் கண்ணாடியாக அமைகின்றது. மனப்பத்தாயம் தனிப்பட்ட சொந்த வாழ்க்கையின் நொந்த பக்கங்களன்று, கரைந்து கொண்டிருக்கும் தலைமுறைகள் கற்றுத் தந்த கரடு முரடான அனுபவம் ஆகும்.

**திறவுசொற்கள்:** கவிஞர் யுகபாரதி – தற்காலக் காதல் – தற்கால நட்பு – மனப்பத்தாயம் - தற்கால அரசியல் - தற்கால சமூக அவலங்கள்.

**முன்னுரை:**

*காலத்தின் பதிவுகலாக அமைவது இலக்கியங்கள் ஆகும். சங்ககால இலக்கியங்களை வைத்து சங்கால நிலைமைகளை அறிய முடிகிறது, சோழர்கால இலக்கியங்களை வைத்து அக்காலத்தின் நிலைமைகளை அறிய முடிகிறது. தற்காலத்தில் வாழும் ஒருவன் இலக்கியங்கள் மூலம் தற்காலத்தில் வாழும் முறைகளை அறிவான். தற்காலத்திற்கு ஏற்ற அறங்கள், பண்பாடுகள், காதல், நட்பு, ஒழுகலாறுகள் என பல்வேறு தற்கால வாழ்வியல்*

கோணங்களைத் தமது கவிதைகள், கட்டுரைகள், திரைப்பட பாடல்கள், நூல்கள் மூலமாக மக்களுக்கு எடுத்துக் காட்டுபவர் கவிஞர் யுகபாரதி ஆவார். யுகபாரதியின் கவிதைத் தொகுப்பான மனப்பத்தாயத்தில் இருந்து சில சமூகச் சிந்தனைகள் சிந்திப்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**கவிஞர் யுகபாரதி**

யுகபாரதி ஒரு தமிழ்க் கவிஞரும், திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். இவர் **1990** இன் முற்பகுதியில் பத்திரிகைகளில் கவிதைகள் எழுதத் தொடங்கியபோது, சிறந்த தமிழ்க் கவிஞரான சுப்பிரமணிய பாரதியின் நினைவாக யுகபாரதி என்ற புனைப் பெயரைப் பயன்படுத்தத் தொடங்கினார். கணையாழி இதழில் பொறுப்பாசிரியராகவும், ராஜரிஷி இதழில் உதவியாசிரியராகவும் இருந்துள்ளார்.

ஆனந்தம் திரைப்படத்தில் "பல்லாங்குழியின் வட்டம் பார்த்தேன்" என்ற பாடலை எழுதியதில் பாடலாசிரியராக அறிமுகமானார். இவர் ஏறத்தாழ இரண்டாயிரம் திரைப் பாடல்களை எழுதியுள்ளார். இவர் **1976** ஆம் ஆண்டு தஞ்சாவூரில் பிறந்தார். இவரின் இயற்பெயர் பிரேம் குமாராகும். இவர் தஞ்சாவூரில் உள்ள மேக்ஸ்வெல் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வியைப் பயின்றார். அறந்தாங்கி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல் பட்டயப் படிப்பு படித்தார். இரண்டு முறை கவிதைக்காக தமிழக அரசின் பரிசை வென்றுள்ளார். சிறந்த பாடலாசிரியருக்கான விருதையும் கலைமாமணி விருதையும் பெற்றுள்ளார். இவருடைய படைப்புகளைப் பாராட்டி கோவை பாரதியார் பல்கலைக்கழகம் `ஐந்தமிழ் விருதை' வழங்கியுள்ளது. திருப்பூர் தமிழ்ச்சங்க விருது, பிலிம்பேர் விருது, ஸ்டேட்பேங்க் விருது, காசியூர் ரங்கம்மாள் விருது, பெரியார் விருது ஆகியனவும் பெற்றுள்ளார். ஐந்துமுறை ஆனந்தவிகடன் விருதும், எட்டுமுறை மிர்ச்சி விருதும் பெற்றுள்ளார்.

**கவிஞர் யுகபாரதி சில கவிதை நூல்கள்**

1. மனப்பத்தாயம்
2. பஞ்சாரம்
3. தெப்பக்கட்டை
4. நொண்டிக்காவடி
5. தெருவாசகம்
6. அந்நியர்கள் உள்ளே வரலாம்
7. மராமத்து,
8. முனியாண்டிவிலாஸ்,
9. பாதாளக்கொலுசு

**மனப்பத்தாயம்**

மனப்பத்தாயம் என்னும் சொல்லின் பொருளை தற்கால இளையச் சமூகம் பெரும்பாலும் அறியாது பழமையான வீடுகளில் தானியாக் குதிர்களாக பயன்படுத்திய பெரிய மண்பாண்டம் ஆகும். அதனை சில இடங்களில் ‘சால்’ என்றும் அழைப்பர். கவிஞரால் இந்நூலுக்கு ஏன் இப்பெயர் வைக்கப்பட்டது என்றால் பத்தாயத்தில் எப்படி தானியம் சேமிக்கப்பட்டு இருக்கிறதோ அதேபோல் மனம் எனும் பத்தாயத்தில் சேமித்த செய்திகளின் வெளிப்பாடு இக்கவிதை தொகுப்பு ஆகும்.

**நெடி**

நெடி என்னும் கவிதையே மனப்பத்தாயம் கவிதைத் தொகுப்பில் முதல் கவிதை நெடி என்பது மதுவின் மனத்தினை கவிஞர் குறிப்பிடுகிறார். பால்மணம் வீசும் குழந்தை தன் தந்தையின் மீது சாராய நெடியை உணர்கிறன. அப்பா தனது குழந்தைக்கு அன்பு முத்தம் கொடுக்கும் பொழுது சாராயத்தின் நெடி மூக்கில்

சுர்ரென்று ஏறுகிறது. அந்த நினைப்பு குழந்தையின் அழ்மனதில் பதிகிறது அதனை எப்போது நினைத்தாலும் சுணக்கம் ஏற்படுகிறது. ஆனால் தாய் வாழ்நாள் முழுக்க இதை சகித்துக் கொண்டு வாழ்கிறாள் என்பனவாக அமையும். அவை,

**நெடி**

**"பால் வீச்சம் அடிக்கிற**
**பருவத்திலேயே**
**சாராய நெடியைச் சரியாகக்**
**கண்டுகொண்டவன் நான்.**
**அன்புப் போதையில்**
**அழுத்திக் கொடுத்த**
**அப்பாவின் முத்தம்**
**சுர்ரென்று மூக்கிலேற**
**எப்போது நினைத்திடினும்**
**சுணங்கிடுவேன்.**
**அம்மா எப்படி**
**ஆயுள் முழுசும்?"[1]** (யுகபாரதி.கவி.பக்.13)

**மதச்சார்பின்மை**

கல்லெறிதல் எனும் தலைப்பில் அமையும் கவிதையில் சமூக நிலை மற்றும் மத சார்பின்மையை அழகாக கவிஞர் கூறிச் செல்கிறார். சாலையின் ஓரமாக செப்பனிட மணல் கொட்டப்பட்டு இருக்கிறது. அவற்றில் கோரைகள் முளைத்துப் பல நாள் பணி நடைபெறாமல் உள்ளது. குழந்தைகள் மணலில் கோயில் கட்டி விளையாடுகின்றனர். களிமண்ணில் கருவறை அலங்காரத்திற்கு காகிதம் வழிபட்டு விளையாடும் சிறுவர்கள் சற்று நேரம் கழித்து வந்துப் பார்த்தால் அதனை நாய் கலைத்து விட அதனைக் கல்லெறிய ஹமீதும் பீட்டரும் ஓடுவார்கள். குழந்தைகளின் மனதில் சமய சார்பு இன்றி கோவில் கட்டி விளையாடுகின்றனர் ஆனால் சமூகத்தில் அப்படி ஒற்றுமையாக இல்லை என்றும், இவர்களே வருங்கால சமூகம் என்றும் பல கருத்தினை 'கல்லெறிதல்' என்னும் கவிதையில் கவிஞர் கூறிச் செல்கிறார்.

**கல்லெறிதல்**

**"சாலையைச் செப்பனிடுவதற்காகக்**
**கொட்டப்பட்ட மணலில்தான்**
**கோயில் கட்டி விளையாடுவோம்**
**கலசத்திற்குப் பதிலாக**
**ஒரு கொத்து காட்டாமினுக்கை**
**நட்டு வைப்போம்**
**நடுவிலொரு குழி பிரித்து**
**உருண்டையாய்**
**களிமண்ணைப் பிடித்து**
**கர்ப்பக்கிரகம் அமைப்போம்**
**காகிதப்பூவால் அலங்கரித்து**
**கன்னத்தில் போட்டுக்கொள்வோம்**
**சப்புக் கொட்டி**
**எதன் பொருட்டாவது**
**கலைய நேரிடும்.**
**மீண்டும் வந்து பார்க்க**
**கலசத்தில் பட்டிருக்கும்**
**நீரபிஷேகத்தில்**
**சற்றே கரைந்திருக்கும்**

அதன் உரு
சோகத் தூவானமாய்க்
கண்கள் அரும்பும்
கோயிலைச் சிதைத்த நாயின் மீது
கல்விட்டெறிவர்
ஹமீதும் பீட்டரும்".[2] (யுகபாரதி.கவி.பக்.14)

**அரசியல்**

'எலியின் நகல்கள்' எனும் கவிதையில் அரசியல்வாதிகளின் நிலை மற்றும் பணியின் தரத்தினை அழகாக கூறிச் செல்கிறார். எலிகள் இருக்கும் வீட்டில் பூனை வளர்ப்பது இயல்பு ஆனால் சமூகத்தில் எலிகளைப் போலப் பலர் சுரண்டலைத் தடுக்கப் பூனைப் போன்று அரசியல்வாதிகளை நம்பினால் அவர்கள் வீட்டின் பாலைத் திருடுகிறார்கள். மந்திரி, ரேஷன் கடைக்காரர், காவல்துறை, நடத்துநரென என இவர்கள் மூஞ்சுறுக்கள். சுரண்டல் லாட்டரி, பரிசு கூப்பன், அதிக வட்டி தரும் தனியார்நிறுவனம் இவை சுண்டெலிகள். வக்கீல், குமஸ்தா, கூலிதர கோணும் முதலாளி இவர்கள் வெள்ளெலிகள். என கவிஞர் உவமையாக கூறுகிறார்.

எலியின் நகல்கள்
"தானியங்களை விழுங்கும்
எலியின் தொல்லையால்
பூனை வளர்ப்போம் வீடுகளில்
கொறிக்கும் எலிகள்
கொழுத்துத் திரியும்
கொல்லும் பூனையோ
பால் திருடும்
எலிகளைப் பார்க்காதவர்
மிக அரிது
மந்திரி வீடு, ரேஷன் கடை
காவல் துறை
சில்லறை மறுக்கும் நடத்துநரென
மூஞ்சுறுக்களின் முகாந்திரங்கள்
வெவ்வேறு
சுரண்டல் லாட்டரி
பரிசுக் கூப்பன்
அதிக வட்டி தரும்
தனியார் நிறுவனம்
எங்கும் இருக்கும் சுண்டெலிகள்
வக்கீல் குமாஸ்தா
கூலி தரக் கோணும் முதலாளி
இத்தியாதிகளில் வெள்ளெலிகள்
எங்குமிருக்கும் பெருச்சாளிகளைக்
குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை
இத்தனைகளில் சிலதை மட்டும்.
கறிக்குதவும் மாமிசமாக்கி
சமைத்துத் தரும்
கிராமத்துக்கிழவி
வைத்தியப் பிரசித்தம்
ஆயினும்
பண்ணை வீட்டு வயக்காடுகளில்
இன்னுமிருக்கின்றன
அடிபடாத சில எலிகள்".[3] (யுகபாரதி.கவி.பக்.18)

**உடைந்தக் குவளைகள்**

சமூகத்தில் எங்கு பார்த்தாலும் எத்துறையினைப் பார்த்தாலும் குறைகள் உண்டு என்பதை நான்கு வரியில் கவிஞர் கூறுகிறார்.

**"அறிந்த கழிப்பறைகள்**
**அத்தனையிலும்**
**உடைந்தே கிடக்கும்**
**நீரள்ளும் குவளைகள்". [4](யுகபாரதி.கவி.பக்.18)**

**காதல்**

காதல் என்பது மனிதருக்கு மட்டுமின்றி அனைத்து உயிர்களிடத்தும் இருப்பது. கவிஞரின் கவிதையில் காதலை விட்டு விடுவாரா என்ன! 'அவள்' என்னும் கவிதையில் காதலியின் வர்ணனைகளைக் கூறுகிறார். வாராத கூந்தலில் காற்று வந்து ஆட்டும்போது அது கீர்த்தனையாக வாசிக்க மேலும் இரண்டு கண்கள் வேண்டும். பவளமேனியில் சுருதி மீட்ட நாற்பது விரல்கள் வேண்டும். அவளின் சிரிப்பில் முத்துக்கள் சிதறுகிறது.

ஆடவன் ஒரு பெண் மீது காதல் கொண்டு அதனை காதலியிடம் கூறும் இன்னல்களைக் கவிஞர் அழகாக கூறுகிறார். காதலியை எதிர்பார்த்து விழி இரண்டையும் நட்டு வைத்து பகலில் கனவு கண்டுக்கொண்டு காத்திருப்பான். அவள் வரவில்லை என்றால் முகம் சோர்ந்து கவலைக் கொண்டுப், பணிகளை மறந்து, பிரம்மையில் ஆழ்ந்து, தேகம் இழைத்து வாடுகிறேன். நீ என்னைக் காதலித்தால் இத்துன்பத்தை நீயும் அனுபவிப்பாய் என்றே எனது காதலினைக் கூறாமல் இருக்கின்றேன் என கவிதை முடிகிறது. அவை,

**ஆதலினால்**

**"வருகை எப்போதென**
**வாசலருகே**
**விழியிரண்டையும்**
**நட்டு வைத்துப்**
**பரிதவிக்கும் நெஞ்சைப்**
**பகல் கனவில் மேயவிட்டு**
**வராவிடில் காரணம் துழாவி**
**முகம் சோர்ந்து**
**கவலை கொண்டு**
**அலுவலை மறந்து**
**அண்ணாந்தபடியே**
**ஞாபகம் பேசி தேகமிளைத்து**
**ஏதோவொரு பிரமையில்**
**என் போல் நீயுமாகி**
**விடக்கூடாதென்றுதான்**
**சொல்லாமல் வைத்திருக்கிறேன்**
**உன்னிடம்கூட**
**என் காதலை".[5] (யுகபாரதி.கவி.பக்.26)**

கிராமத்துக் காதலினைக் காணாதவர்க்கு இக்கவிதை அவற்றைப் படம் பிடித்துக் காட்டும். பழங்கஞ்சியும் பைத்தந்துவையலும் ஏருழும் மாமனுக்கு அன்புடன் கொண்டு செல்வாள். ஆனால் அவனும் இவளுக்குப் பிடிக்கும் என ஈச்சம் பழங்களை முடித்து வைத்து இருப்பான் அது வானம் பார்த்த பூமி எப்பொழுதாவது மழை பொழியும் ஆனால் இவர்கள் காதல் எப்பொழுதும் பொழியும் பிரிய மழை, இதனாலே அந்நிலம் உயிர்ப்புடன் இருக்கிறது.

**ஈரம்**

**"பழங்கஞ்சியும்**
**பயித்தந் துவையலும்**
**ஏருழும் மாமனுக்கு**
**எடுத்துப் போவாள்**
**அவளுக்குப் பிடிக்குமென்று**
**ஈச்சம் பழங்களைத்**
**துண்டில் மூடித்**
**தருவான் இவன்**
**வானம் பார்த்த பூமியில்**
**எப்போதும் பெய்தபடி**
**பிரிய மழை".[6] (யுகபாரதி.கவி.பக்.36)**

'உப்பு மூட்டை' எனும் கவிதையில் சேர முடியாத காதலின் வலிகளைக் கவிஞர் பதிவு செய்கிறார். காதலிக்கும் பொழுது அவளை உப்பு மூட்டையாக நான் சுமந்தேன், என்னால் அவளுக்கு திருமணம் நடைபெற்றுக் குடும்பத் தொல்லைகளால் தாம்பு கயிற்றில் தொங்கிப் போனால். இப்பொழுது எனது தோள்கள் யாரையாவது சுமக்க ஏங்குகிறது என கவிதை நிறைவடையும்.

ஒரு ஆடவர் பெண் மீது கொண்ட காதல் எப்பொழுதும் மாறுவது இல்லை. 'உன் நிமித்தம்' எனும் கவிதைகளில் கவிஞர் பதிவு செய்கிறார். வேறு ஆண் மகனைத் திருமணம் செய்து கக்கத்திலொறு குழந்தை, வயிற்றில் ஒன்று இருப்பினும் உன் மீது எனக்கு இருக்கிறது காதல் என காதலின் சிறப்பைக் கூறியிருக்கிறார்.

**உன் நிமித்தம்**

**"யாரோவொரு**
**மனசறியா முரடனுக்கு**
**மணமாகிக்**
**கக்கத்திலொன்றும்**
**கர்ப்பத்திலொன்றுமாய்**
**சுமந்து போகிற இப்போதும்**
**உன்மீது எனக்கிருக்கிறது**
**காதல்". [7] (யுகபாரதி.கவி.பக்.50)**

**சமூக அவலங்கள்**

குடும்பங்களின் கூட்டமைப்பே சமுதாயம். குடும்பத்தின் பிரச்சனைகளில் சமூக நிலையை 'சுத்தம்' எனும் கவிதையில் பதிவு செய்கிறார் கவிஞர். அப்பா உணவு உண்ணும் பொழுது தவறுதலாக தாயின் முடி உணவில் வந்து விட்டதற்கு அம்மாவின் உறவினர் முழுவதும் அவமானப்படுத்த பட்டனர், ஆனால் அதே அப்பா கருவப் புதருக்குள் எச்சில் குவலையில் சாராயம் குடிக்கும் பொழுதும், நோய் பிடித்த வைப்பாட்டியுடன் இருக்கும் பொழுதும் சுத்தம் பார்ப்பது இல்லை. அந்த சகிப்பு குடும்பத்திலும் இருந்தால் சமூகம் சிறப்பாக இருக்கும் என குடி, விபச்சாரம் என இரண்டு சமூக சிக்கலைக் கவிஞர் இக்கவிதையில் ஏற்றி கூறுகிறார்.

**சுத்தம்**

**"தவறுதலாய்ச் சோற்றிலொரு**
**தலைமுடி கிடந்தமைக்காகத்**
**தகப்பன் பிசாசு**
**தருவிக்கும் வசைகளில்**
**கொச்சைப்படுத்தப்படும்**
**அம்மாவின் பெண்ணுறவு**

**முழுசும் சுத்தம்.**
**எச்சிக் குவளையில்**
**கருவப் புதருக்குள்**
**மூக்கைப் பிடித்துக்**
**கொண்டு சாராயத்தை**
**மல்லாத்தும் போதும்**
**நோய்கொண்ட வைப்பாட்டியை**
**நெருங்கும் போதும்**
**அப்பன்மார்களுக்கு**
**அவசியப்படுவதில்லை**
**சுத்தம்".[8] (யுகபாரதி.கவி.பக்.28)**

**சமூகத்தில் பெண்கள் நிலைமைகள்**

அமுக்கும் பழுப்புமான கேசம், கொக்கிகளறுத்த இரவிக்கை, பேருக்கு என்று சேலை உடுத்தி இருப்பாள் மனநலம் இல்லாத பெண் ஒருத்தி. அவளை ஆகக்கூடி என்று ஊரார் அழைப்பார்கள். வெயிலில் எங்கேயும் எச்சில் தொட்டில் ஓரம் பேசி சிரிப்பாள் பயம் என்பது அறியாதவள் இரயில், பேருந்து செல்லும்போது தாண்டி போவாள். மனிதர்கள் விலக்கிய நாய், கழுதை எல்லாவற்றுடனும் பேசுவாள். ஊரெல்லாம் பைத்தியம் என்பார்கள் சாக்கடையில் காலலம்பி குப்பையோரம் படுத்திருந்த ஆகாக் கூடியை இரண்டாமாட்ட சினிமா பார்த்து வந்த இரண்டு பேர் அவளை சுகத்திற்காக போகிக்க துடித்தனர். அவர்களை எதில் சேர்ப்பது என 'ஆகாக்கூடி அவள் பெயர்' என்னும் கவிதை முடியும். இதில் பெண் பைத்தியமாக இருந்தாலும் அவளுக்குப் பாதுகாப்பு இல்லை. விளக்க வேண்டியது நாய், கழுதை இல்லை தீய எண்ணம் கொண்ட மனிதர்கள் பயப்பட வேண்டியது இரயில் பேருந்துக்கு இல்லை மனிதர்களுக்கு என கவிஞர் பறைசாற்றுகிறார்.

**திருமண நிகழ்வு**

பெண்களுக்கு திருமணம் என்பது வாழ்வின் மிக முக்கியமான நிகழ்வு ஆனால் சமூக கட்டமைப்பின் காரணமாக பலரின் திருமணம் தடைபடுகிறது. முப்பத்தாறு வயசு முருகேஸ்வரிக்கு, பல காரணங்களால் திருமணம் நடைபெறாமல் வருத்தத்தில் அரிசி தின்றுக் கொண்டு இருந்தாள். ஐதீகம் சொல்லி பாட்டி திட்டுகிறாள் அரிசி தின்றால் கல்யாணத்தில் மழை வரும் என்றவுடன் அவள் மேலும் அரிசியை வேகமாக மென்றால் மழையுடனாவது திருமணம் விரைந்து வரட்டும் என்று. இதில் நன்மைக்காக வைத்த ஐதீகத்தாலே பலரின் திருமணம் நடைபெறாமல் உள்ளது என மூடநம்பிக்கைப் பற்றி கவிஞர் சுட்டியுள்ளார்.

**புழுங்கல்**

**"முப்பத்தாறு வயசு**
**முருகேஸ்வரியை**
**ஐதீகம் சொல்லி**
**அதட்டுவாள் பாட்டி**
**அரிசி திங்காத**
**அடைமழை பெய்யும்**
**கல்யாணத்தில்**
**சொல்லியும் கேட்காது**
**மேலும் அதக்குவாள்**
**அரிசியை**
**வாராத முகூர்த்தம்**
**மழையோடாவது வந்து**
**தொலையட்டுமென்".[9] (யுகபாரதி.கவி.பக்.52)**

**சுமதியின் வீடு**

'சுமதியின் வீடு' எனும் கவிதையில் பெண்கள் வாழ்வில் அன்றாடும் நடைபெறும் துன்பங்களைப் பட்டியலிட்டு செல்கிறார் கக்கத்தில் இருந்து இறக்கினால் வீலென அழும் தம்பி, அதனால் நாள் முழுதும் கக்கத்தில் வைத்து உடம்பு எல்லாம் வலி அவனது மூக்கு சளித் துடைக்க எனது பாவாடை. அவளின் அன்றாட பணி வீடு பெருக்குதல், எச்சில் தட்டு பாத்திரம் கழுவுதல், கந்தல் கசக்க, கஞ்சி தண்ணி கிண்டிவிட, ஊதினாலும் எரியாத ஈர விறகு அடுப்பு நான் இந்த வேலை செய்யாமல் பள்ளிக்கு படிக்க போகணும்னு சொன்னா முறைக்கும் அப்பா, ஆனால் பக்கத்து தெருவில் அவருக்கு சின்ன வீடு இரண்டு. அம்மாவின் கவலை சோறு குலைய கூடாது மீறினால் அப்பாவின் தீய வார்த்தை மற்றும் அடிகள் பரிசு. அவளுக்கு ஆசைகள் என வீட்டில் அறிந்தது ரிப்பன், வளையல், பவுடர், பொட்டு இதைத் தாண்டி வேறு ஆசை இல்லை என அவளைப் பற்றி நினைப்பதும் இல்லை.

**சுமதியின் வீடு**

**"கக்கத்தை விட்டிறங்கினால்**
**வீலென அலறும்**
**தம்பியின் மூக்குச்சளிக்காக**
**என் பாவாடை**
**வூடு பெருக்க**
**எச்சித்தட்டுக் கழுவ**
**கந்தலைக் கசக்க**
**கஞ்சித்தண்ணி கிண்டிவிட**
**ஊதினாலும் எரியாத**
**ஈரவிறகுதான் நானும்**
**யூனிபாரம் போட்டு**
**நானும் படிக்கிறேன்னு**
**சொன்னப்ப**
**விகாரமான அப்பனுக்கு**
**அடுத்தடுத்த தெருவுல**
**ரெண்டு சின்ன வீடு**
**அம்மாவுக்கோ**
**சோறு கொழையக் கூடாதென்ற**
**கவலைதான் எப்பவும்**
**ரிப்பன், வளையல்**
**பவுடர், பொட்டு**
**இதைத் தாண்டியும்**
**ஆசைகள்**
**பிசுக்கேறி**
**ஈரும் பேனுமான**
**தலைக்கு மட்டுந்தானா**
**சீயக்காய்ப் பொடிகள்?".[10] (யுகபாரதி.கவி.பக்.53)**

**ஒத்தவூட்டுக்காரி**

ஒரு வீட்டில் கணவன் இறந்த பின்னர் ஒரு பெண்மணி தனியாக வாழும்போது ஊர் அவளைத் தவறாக பேசுகிறது. இது ஊர் முழுதும் பரவி பஞ்சாயத்து வரை போய் அவளை ஊரைவிட்டு தள்ளி வச்சிட்டாங்க ஆனால் ஒத்த வூட்டுக்காரிக் கூட யாரும் பழக்கக் கூடாது என பஞ்சாயத்து உத்தரவு. பல இன்னல்கள் பஞ்சாயத்து நாட்டாமை மட்டும் இரவு வந்து செல்வார் ஆயிரம் தான் இருந்தாலும் ஆம்பளையின் பெரிய தவறும் சமூகம் கண்டு கொள்வது இல்லை பெண்கள் தவறே செய்யாமல் இருந்தாலும் துணையாக யாரும் இல்லை என்றால் அவளுக்கு ஏற்படும் இன்னலை 'ஒத்தவூட்டுக்காரி' எனும் கவிதை வாயிலாக அறிய முடிகிறது.

ஒத்தவூட்டுக்காரி

**"தாத்தா செத்துப்போன**
**நாலாவது மாசமே**
**அப்பத்தா அந்தாளுக்கு**
**வப்பாட்டியாயிடுச்சாம்**
**சேதி தெரிஞ்சு**
**பஞ்சாயம் பேசி**
**தள்ளி வச்சிட்டாங்க**
**தனியா**
**ஒத்தவூட்டுக்காரிக்கு**
**ஒத்தாசை கூடாதுன்னு**
**ஊரு சனத்துக்கு**
**உத்தரவு வேறாம்**
**சாகும் வரைக்கும்**
**ராவில் மட்டும்**
**துணையாயிருந்த**
**தர்மகர்த்தா**
**குனிந்து தெருவில் நடந்ததாய்**
**சொல்வாரில்லை**
**ஆயிரமெனினும்**
**தீட்டும் நீக்கும்**
**ஆம்பளைக்கேது".** [11] **(யுகபாரதி.கவி.பக்.41)**

**கேள்வி**

சாதி நாட்டில் எப்பொழுது தோன்றியது**?** எனும் கேள்விக்கு இங்கு யாரிடமும் பதில் இல்லை ஆனால் அதை எங்கு பார்க்க வேண்டுமோ அங்கு மட்டும் பார்த்தால் எந்த சண்டையும் சமூகத்தில் வராது**.** தமக்கு தேவையான ஒன்றில் மனிதன் சாதி பார்த்து இல்லை என்று சமூக நிலையை சிறு நிகழ்வில் கவிஞர் கூறிச்சொல்கிறார்**.** பல நாள் காமக் கிறுக்கோடு படுகைக்கு வருகிறார் பத்மநாப முதலியார், ஜிப்பாவில் மூச்சடைக்கும் புகையிலை மனத்துடன் சரசமாற்றும் குருசாமி சேர்வை, ஃபாரின் மனைவியை என்னில் நினைத்து உறவு கொள்ளும் பக்ருதீன் அகமது, பட்டு வேட்டியும் ஜமீன் பெல்ட் உடன் வருவார் பெருமாள் தேவர் இவர்கள் யாரும் என்னிடம் சாதி கேட்பதில்லை காமத்தை மட்டுமே எதிர்பார்த்தனர் ஆனால் இவர்கள் பெயரிலேயே சாதியை வைத்து சுற்றுபவர்கள் அந்த கவிதை வருமாறு,

**கேள்வி**

**"கிழமைதோறும் கிளர்ந்த**
**காமக் கிறுக்கோடென்**
**படுக்கை வருகிற**
**பத்மநாப முதலி**
**சில்க் ஜிப்பாவில் மூச்சடைக்கும்**
**பன்னீர்ப் புகையிலை**
**மணங்கமழ சரசமாற்றும்**
**குருசாமி சேர்வை**
**ஃபாரின் மனைவியை**
**என்னில் தேடும்**
**பக்ருதீன் அகமது**
**பட்டு வேட்டி**
**பச்சை நிற ஜமீன் பெல்ட்**
**பெருமாள் தேவர்**
**பெரியசாமி, அந்தோணியென**
**என்னவெல்லாமோ கேட்டுப் பெறும்**
**ஞாபகப் பிசிறாய் எண்ணிறைந்தோர்**
**இவர்களில் எவருமே**
**கேட்டதில்லை சாதியை".**[12] **(யுகபாரதி.கவி.பக்.42)**



Kalanjiyam

**மூடநம்பிக்கை**

சமூகத்தில் மூடநம்பிக்கை என்பது எப்போதும் இருக்கும் ஒன்று கவிஞர் தமது யதார்த்த கவிதையின் மூலமாக மூடநம்பிக்கையைச் சுட்டிக் காட்டுகிறார். கோயிலில் மகமாய்க்கு கோழி, மதுரைவீரனுக்கு கிடா இந்த இரத்த வீச்சமும் சாமிகளுக்கு நேர்ந்த கடன் ஏன் என்றால் காலம் காலமாக வேண்டுதல் இருக்கிறது துன்பம் தீர்வது இல்லை. கடவுள் இதனை எதிர்பார்ப்பதும் இல்லை உண்மையான அன்பை மட்டுமே எதிர்பார்க்கிறார். ஊரின் அனைவருக்கும் ஆயிரத்தெட்டு பிரச்சனை ஆனால் பாளையத்தமனுக்கு நூற்றியெட்டு விளக்கு பூஜை தவறாமல் நடக்கிறது எனும் கேள்வியின் மூலம் கவிஞர் மூடநம்பிக்கை சார்ந்து நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

**“மகமாயிக்குக் கோழி**
**மதுரை வீரனுக்குக் கெடா**
**அப்போதிருந்த**
**வெட்டுக் கூச்சலும்**
**இரத்த வீச்சமும்**
**சாமிகளுக்கு நேர்ந்த கடன்”. [13] (யுகபாரதி.கவி.பக்.45)**

**“அவனவனுக்கு**
**ஆயிரத்தெட்டு சோகம்**
**பாளையத்தம்மனுக்கோ**
**தவறாமல் தடபுடலாய்**
**நூத்தியெட்டு விளக்குப் பூசை”.[14] (யுகபாரதி.கவி.பக்.46)**

**ஏழை**

நாட்டை ஆளும் மன்னவன் ஒவ்வொரு மனிதனும் அன்றாட தேவைகள் நிறைவு பெறும் வகையில் ஆட்சி செய்ய வேண்டும். மக்கள் எவ்வளவு ஏழையாக உள்ளனர் என கவிஞர் தமது கவிதையில் சுட்டிக் காட்டுகிறார். தேநீரின் விலை மிகவும் குறைவு ஆனால் அதற்கும் வழி இல்லாதவர் தேநீர் பழக்கம் தற்போது நமக்கு தேவையில்லை என மனதை தேற்றிக்கொண்டு செல்லுகின்றனர். பொதி சுமப்பது கழுதைகள் மட்டும் இல்லை இந்த ஏழை மக்களும் தான், அவர்களின் வீடுகள் இருப்பது கூவக் கரையிலும் கொசுக் கடியிலும் அதுவும் மழை பொழிய ஒழுகும் குடிசைகள் என ஏழைகளின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**“இருவர் பையிலும் பணமில்லை**
**இப்போதைக்குச்**
**சொல்லிக் கொண்டு தப்பிப்போம்**
**தேநீர்ப் பழக்கம் தேவையற்றதென.**

**பொதி சுமப்பவை**
**யாவும் கழுதைகளில்லை.**
**கூவக்கரையிலும் கொசுக்கடியிலும்**
**புதிது புதிதாய்க்**
**குடிசைகள்”. [15] (யுகபாரதி.கவி.பக்.48)**

**மனப்பத்தாயம்**

இக்கவிதையின் பெயரே இந்நூலுக்கு வைக்கப்பட்டுள்ளது. மனப்பத்தாயம் எனும் கவிதையில் அமைந்த கருத்துக்களை வரிசைப்பட காண்போம். வருடம் முப்போகமும் திளைத்து மகசூலை வைக்க இடம் இல்லாமல் இருந்தனர். மினுக்கும் சோக்கும் மேலோங்கி சோக்காளியுடன் கூத்தியாள், வைப்பாட்டி என காமத்தில் கழித்த

கதைகள் பல. வருமானத்தை பத்தாயத்திற்குள் பதுக்கிய ஜமீன் குடில்கள் பலர். இப்போது கந்தைத் துணியாக மாறி சோத்துக்கு வழியின்றி பனியன் கம்பெனியில் வேலை பார்க்கின்றனர்.

முன்பெல்லாம் தானியம் நிறைந்து இருக்கும் பத்தாயத்தின் மீது பூனை, உசுரமாக இருந்தாலும் பாராமல் அதன் மீது உறங்கும். தற்போது காலி பத்தாயத்தினை கைவிட்டு, அவை அடுப்பில் தஞ்சம் அடைகிறது.

தஞ்சையில் பல சிவ ஸ்தலங்கள். உயரமான பிரகதீஸ்வரர் கோயில், அதன் கோபுரம் ஒற்றைக்கல்லில் செய்யப்பட்டது, நாளும் வளரும் பெரிய நந்தி என பேசும் போது வியப்பில் பத்து ரூபாய் எனாமாகத்தருவான் வெளிநாட்டுக்காரன். இப்போதைய நிலையையும் அவலத்தையும் கவிஞர் சுட்டிக் காட்டுகிறார்.

கோயில் என்பது புனித மாக மதிக்கப்படும் இடம். அங்கு கற்பூரம் விற்கும் கடையில் பான்பராக் வஸ்துக்கள் வேறு வழியின்றி இப்படி மாறியுள்ளனர். நலனா நப்பாசைக்கு தும்பிக்கை ஏந்தும் யானை இவை முன்பு போரில் போரிட்டது இப்போது கோயில் முன்னர் பிச்சை எடுக்கிறது.

நமது பாட்டன் சோழன் உலகோச்சினான் ஆனால் அவனது தலைமுறை ஆகிய நாம் நாடு நகரமென நலிந்து தேய்ந்து எடுபிடியாக சுற்றுகிறோம். பல கோயில் சிதலமடைந்து உள்ளது அவை அப்படியே இருக்கும் பொழுதும் பழமையும் இருக்கிறது, அவற்றை புனரமைக்கும்பொழுது அது நன்மையாகவே இருந்தாலும் இயல்பை தொலைத்து தான் கோயில் புனரமைக்கப்படுகிறது என கவிஞர் தனது மணப்பத்தாயத்தில் உள்ள கவலையினைக் கவிதையாக வடித்துள்ளார்.

**மனப்பத்தாயம்**

**“முப்போகமும்**
**முங்கித் திளைத்த**
**மகசூலால்**
**வைப்பதற்கு இடமற்ற**
**நிறை வாழ்வு**
**மினுக்கும் ஷோக்கும்**
**மேலோங்க,**
**குதிரை வண்டிகளில்**
**சேக்காளி சகிதம்**
**கூத்தியாளை வாழ வைக்க**
**கழுத்து நிரம்பிய**
**காசு பணத்தைக்**
**காமத்துக்கழித்த**
**கதைகள் கோடி**
**காவிரிப்பாசனம்**
**கரை புரண்டோட**
**வருஷம் முழுக்க**
**வற்றாத வாழ்க்கை**
**வருமானத்தைப் பத்தாயத்திற்குள்**
**பதுக்கின ஜமீன் குடில்கள்**
**இஷ்டத்துக்கு இறைத்த கேணி**
**ஊற்றுக்கண் அடைபட**
**பூசிய சாயம் பொய்யென்றாகக்**
**கதியானதோ கந்தல் துணி**
**கக்கடைசியில்,**
**சோறுடைத்த சோழ வளநாடு**
**சோத்துக்கில்லாமல்**

**பக்கத்தூர் பனியன் கம்பெனிகளில்.**

**இரண்டாள் ஒசரமிருக்கும்**
**பத்தாயத்தின் மீதேறிப்**
**படுத்துறங்கும் பூனை**
**வெற்றுப்பத்தாயத்தை**
**விட்டொழித்துத்**
**தற்போதவைகள்**

**அடுப்பில்.**

**முக்கமெங்கும் சிவ ஸ்தலம்**
**முத்தாய்ப்பாய் பிரகதீஸ்வரர்**
**ஒற்றைக் கல்லால்**
**உயர்ந்த கோபுரம்**
**நாளும் பெருகும் நந்தி**
**சமயத்துக்கேத்த பேச்சில் மயங்கி**
**பத்து ரூபாய் இனாம் தருவான்**

**வெளிநாட்டுக்காரன்.**

**கற்பூரம் விற்கும் கடையிலேயே**
**ஏகமாய் விற்பனையாகும்**
**பான்பராக் வஸ்துகள்**
**நாலணா நப்பாசைக்குத்**
**தும்பிக்கையேந்தும்**
**போரடித்த யானை**

**கோயில் வாசலில்.**

**உலகோச்சினான் முப்பாட்டன்**
**நாடு, நகரென**
**நலிந்து, தேய்ந்து**
**ஊருக்கும் உதவாது**
**எட்டாந் தலைமுறையில்**

**எடுபிடியாக நான்.**

**சிதைந்த ஸ்தலங்களை**
**புனரமைக்கப் புனரமைக்க**
**இயல்பைத் தொலைத்த**
**சோகத்தோடு**
**சிரிக்க மறுக்கிறான் சிவன்". [16] (யுகபாரதி.கவி.பக்.37-39)**

**முடிவுரை**

மனப்பத்தாயம் எனும் கவிதைத் தொகுப்பில், கவிஞர் சமூகம், காதல், கல்வி, மதம், அரசியல், ஏழைகள், பழமை என தமது மனப்பத்தாயத்தில் உள்ள அனைத்து செய்திகளையும் தற்கால சமூகம் விழித்திட, வரும் தலைமுறையினர் செழிப்பாக நல்வழியில் செல்லும் வகையில் இந்த மனப்பத்தாயம் என்னும் கவிதைத் தொகுப்பை கவிஞர் யுகபாரதி படைத்துள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

1.யுகபாரதி கவிதைகள் (மனப்பத்தாயம் முதல் மராமத்து வரை) - 2019, நேர்நிரை பதிப்பகம், 181, இராமகிருஷ்ணாநகர், ஆழ்வார்திருநகர், சென்னை - 600087.

References:

1. Yugabharathi Poems (From Manapatthayam to Maramathu) – 2019, Nernirai Publishing House, 181, Ramakrishnanagar, Alwarthirunagar, Chennai – 600087

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.

Kalanjiyam